WEB COPY



BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT

DATED: **29.07.2024**

CORAM:

**THE HONOURABLE MR.JUSTICE C.SARAVANAN**

**Cont P(MD)No.1269 of 2024**
**in**
**W.P.(MD)No.22582 of 2019**

Kanagavel ... Petitioner/Petitioner

Vs.

1.Mr.Karthikeyan,
District Collector,
Tirunelveli.

2.Mr.Dharmaraj,
Inspector of Police,
Eruvadi Police Station,
Nanguneri Taluk,
Tiruvelveli. ...Contemnors/Respondents

**PRAYER:** Contempt Petition filed under Section 11 of Contempt of Courts Act, 1971, to punish the respondents for their willful disobedience of the order dated 08.04.2022 passed by this Court in W.P.(MD)No.22582 of 2019.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

| | |
|---|---|
| For petitioner | : Mr.V.Sasi Kumar |
| For respondents | : Mr.G.Suriyananth<br>Additional Government Pleader for R1<br>Mr.A.Albert James<br>Government Advocate(Crl.Side) for R2 |

*****

**ORDER**

The learned Additional Government Pleader for the first respondent informs that the orders of this Court dated 08.02.2022 in W.P.(MD)No.22582 of 2019 has been complied with to this effect and a copy of the order dated 28.06.2024 bearing reference in No.COLEX/500/2023/Ex.4 passed by the first respondent has been filed and the content of which, reads as under:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூர் டாஸ்மாக் கடை எண்.10662-ன் மேற்பார்வையாளர் திரு.கனகவேல் த/பெ.முத்துக்கிருஷ்ணன் என்பவர் 20.04.2018 அன்று டாஸ்மாக் கடையில் மதுபானம் விற்பனை செய்த பணம் ரூ.7,40,000/- ஐ இரவு 10.00 மணிக்கு மேல் எடுத்து கொண்டு சென்ற வழியில் கொள்ளையடிக்கப்பட்டதாகவும், தன்னால் 21.04.2018 மற்றும் 23.04.2018 ஆகிய தேதிகளில் டாஸ்மாக் நிர்வாகத்திற்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.7,40,160/-ஐ திரும்பி வழங்கக்கோரி சென்னை டாஸ்மாக் லிட். மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு 10.07.2019-ல் அளித்துள்ள மனுவினை பரிசீலனை செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். WP(MD)NO.22582/2019-ன்படி வழக்கு தொடுக்கப்பட்டு, 08.02.2022 -ன்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரருக்கு 10.07.2019 அன்று அளிக்கப்பட்ட மனுவின் மீது சட்டத்திற்கு உட்பட்டு உரிய உத்தரவினை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என பார்வை 2ல் கண்டுள்ளவாறு மனு செய்துள்ளார்.

மேற்படி குறித்து மேல்நிலை பரிசீலனை செய்ததில் சென்னை டாஸ்மாக் நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களால் கடை மேற்பார்வையாளர் மற்றும் கடைப் பணியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து சுற்றறிக்கை ந.க.எண்.3186/ஓ1/2009, நாள் 20.01.2010-ல்



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

தெரிவிக்கப்பட்டுள்ளபடி, டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகளில் நடைபெறும் திருட்டுகளை தடுக்க வேண்டி அன்றாட விற்பனைத் தொகையினை டாஸ்மாக் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள இரும்பு பெட்டிகளில் மட்டுமே பணத்தை வைத்து பூட்ட வேண்டும். தங்கள் இருப்பிடத்திற்கு தன்னிச்சையாக எடுத்துச் செல்வது போன்ற செயல்களில் ஈடுபடும் பொழுது திருட்டு மற்றும் கொள்ளை அடித்தல் மூலம் பணம் இழப்பு ஏற்பட்டால் அத்தொகையை காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் வழங்க இயலாது. அக்கடையில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களே முழு பொறுப்பாவார்கள் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் புகாரின் அடிப்படையில் ஏர்வாடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் அவர்களால் முதல் தகவல் அறிக்கை 98/2018 u/s 392 IPC வழக்கு பதிவு செய்யப்பட்டு அவ்வழக்கில் எதிரி அருண்சதி 06.02.2019 அன்றும் எதிரி விஜயகுமார் என்பவர் 18.09.2019 அன்றும் கைது செய்யப்பட்டு, மேற்படி நபர்களிடமிருந்து பணம் ஏதும் பறிமுதல் செய்யப்படவில்லை என பார்வை 4-ல் கண்டுள்ள கடிதத்தில் ஏர்வாடி காவல் ஆய்வாளர் தெரிவித்துள்ளார். இவ்வழக்கில் காவல் ஆய்வாளரால் 25.09.2019 அன்று நாங்குநேரி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு குற்றவியல் நீதிமன்ற வழக்கு CC 537/2019 நாள் 07.11.2019-ன்படி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு நாளது தேதி வரை வழக்கு நிலுவையில் உள்ளது.

எனவே, மேற்கண்ட டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை அடிப்படையில் மனுதாரருக்கு காப்பீடு மூலம் பணம் வழங்க வழிவகை இல்லை. மேலும், மேற்படி வழக்கு நாங்குநேரி குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மனுதாரர் கூறியவாறு மேற்படி பணம் ஒரு வேளை கைப்பற்றப்பட்டிருந்தாலும் அதனை நீதிமன்றம் மூலம் மட்டுமே பெற இயலும். இது மாவட்ட ஆட்சித்தலைவரின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல என்பதால் மேற்படி நீதிமன்றத்தை அணுகி மனுதாரர் பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

In view of the above, this contempt petition stands closed.

Index : Yes / No

Internet : Yes / No

apd

**29.07.2024**



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



To

1.Mr.Karthikeyan,
District Collector,
Tirunelveli.

2.Mr.Dharmaraj,
Inspector of Police,
Eruvadi Police Station,
Nanguneri Taluk,
Tiruvelveli.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**C.SARAVANAN, J.**

apd

**Cont P(MD)No.1269 of 2024**

**29.07.2024**



https://www.mhc.tn.gov.in/judis